தினமலர் 75
தேசிய தமிழ் நாளிதழ்

# குழந்தைகளுக்கு வலிப்பு நோய் அதிகம் ஏற்படுகிறது

ADDED : டிச 01, 2025 06:30 AM



புதுச்சேரி: குழந்தைகளுக்கு தான் வலிப்பு நோய் அதிகம் ஏற்படுகிறது என, ஜிப்மர் உதவி பேராசிரியர் ரம்யா சீனிவாச ரங்கன் பேசினார்.

ஜிப்மர் குழந்தைகள் நல துறை சார்பில், குழந்தை பருவ வலிப்பு நோய் குறித்த ஒரு நாள் கருத்தரங்கம் நடந்தது. கருத்தரங்கில் ஜிப்மர் குழந்தைகள் மருத்துவ துறை உதவி பேராசிரியர் ரம்யா சீனிவாச ரங்கன் பேசியதாவது:

உலக அளவில் 1,000 குழந்தைகளில் 3 முதல் 6 பேர் வரை கை, கால் வலிப்பு நோய் ஏற்படுகிறது. இந்தியாவில் 1,000 குழந்தைகளில் 5.59 பேர் வரையிலும் இந்நோய் பாதிப்பு உள்ளது. வலிப்பு நோய்க்கு ஆரம்ப கால, துல்லியமான நோயறிதல், சிகிச்சை மிக முக்கியமானது. உலக அளவில் 40 சதவீதம் 18 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு வலிப்பு நோய் தாக்கம் ஏற்படுகிறது. 70 முதல் 80 சதவீதம் வரையிலான குழந்தைகள் ஒன்று அல்லது இரண்டு கூட்டு மருந்துகளால் வலிப்பு நோய்களில் இருந்து விடுபடுகின்றனர்' என்றார்.

தொடர்ந்து, வலிப்பு நோய் குறித்த மூட நம்பிக்கை, தவறான சிகிச்சை வழிமுறைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. முதுநிலை மாணவர்களுக்கு வலிப்பு நோய் குறித்த சுவரொட்டி போட்டி நடத்தப்பட்டது. அந்த படைப்புகள் காட்சிப்படுத்தப்பட்டன.

Link: https://www.dinamalar.com/news/puducherry/children-are-more-likely-to-have-seizures/4096618

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்
THE THANTHI TRUST

# ஜிப்மரில் மருத்துவ கருத்தரங்கம்

புதுச்சேரி, டிச.1-

கோரிமேடு ஜிப்மர் ஆஸ்பத்திரியில் குழந்தை நல மருத்துவத் துறை சார்பில் குழந்தை பருவ வலிப்பு நோய்களின் அத்தியாவசிய கோட்டுபாடுகள் மற்றும் சமீபத்திய முன்னேற்றங்கள் குறித்த ஒருநாள் மருத்துவ கருத்தரங்கம் நடந்தது. இதில் ஜிப்மர் மருத்துவ கண்காணிப்பாளர் வினோத்குமார், கல்லூரி முதல்வர் விக்ரம் காடே, ஆராய்ச்சி முதல்வர் சுனில் நாராயணன் ஆகியோர் கலந்துகொண்டு குழந்தை பருவ வலிப்பு நோய் கண்டறிதல் மற்றும் பராமரிப்பு குறித்து விளக்கி பேசினர்.

இதில் முதுகலை மருத்துவ மாணவர்கள், டாக்டர்கள், குழந்தைகளின் பெற்றோர் கலந்துகொண்டனர். இதற்கான ஏற்பாடுகளை குழந்தைகள் மருத்துவத்துறை உதவி பேராசிரியர் ரம்யா சீனிவாசரங்கன் மற்றும் பலர் செய்திருந்தனர்.

தினகரன்

# ஜிப்மரில் குழந்தைபருவ வலிப்புநோய் கருத்தரங்கு



புதுச்சேரி, டிச. 1: ஜிப்மர் குழந்தைநல மருத்துவத்துறை, குழந்தைபருவ வலிப்பு நோய்களின் அத்தியாவசிய கோட்பாடுகள், முன்னேற்றங்கள் குறித்த தொடர் மருத்துவ கருத்தரங்கு நடந்தது. குழந்தைபருவ வலிப்பு நோய் குறித்த மருத்துவ நிபுணத்துவத்தை வலுப்படுத்தவும், மக்களிடையே பொதுவான விழிப்புணர்வை அதிகரிக்கவும் நோக்கமாக கொண்டு கருத்தரங்கு நடந்தது.

உலக அளவில் 1000 குழந்தைகளில் 3 முதல் 6 பேர் வரை கை, கால் வலிப்பு நோய் ஏற்படுகிறது. இந்தியாவில் ஆயிரம் குழந்தைகளில் 5.59 பேர் வரை இந்நோய் பாதிக்கிறது. உலகளவில் கிட்டத்தட்ட 40 சதவீதம் 18 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளில் வலிப்புநோய் தாக்கம் ஏற்படுகிறது. ஆரம்பகால மற்றும் துல்லியமான நோயறிதல், பொருத்தமான சிகிச்சையுடன் வளர்ச்சி மற்றும் நீண்டகால நல்வாழ்வை குழந்தைகளுக்கு உறுதி செய்வது மிக முக்கியமான ஒன்றாகும். 80 சதவீதம் குழந்தைகள் 1 அல்லது 2 வகையான கூட்டு மருந்துகளால் வலிப்பு நோயிலிருந்து விடுபடுகிறார்கள்.

அதேசமயம் 30 சதவீதம் குழந்தைகளுக்கு மருந்து எதிர்ப்பு வலிப்புநோய் ஏற்படவும், அதனால் நீண்டகால மூளை தொடர்பான நரம்பியல் பிரச்னைகளுக்கும் குழந்தைகள் உள்ளாகுகின்றனர்.

ஜிப்மர் இயக்குனர் டாக்டர் வீர் சிங் நேகி வழிகாட்டுதலில், ஜிப்மர் மருத்துவ கண்காணிப்பாளர் டாக்டர் வினோத் குமார், ஜிப்மர் கல்லூரி முதல்வர் விக்ரம் காடே, ஜிப்மர் ஆராய்ச்சி முதல்வர் டாக்டர் சுனில் நாராயணன் ஆகியோர் வலிப்புநோய் கண்டறிதல் மற்றும் பராமரிப்பு குறித்த விரிவான அமர்வுகளில் கலந்துகொண்டனர்.

வலிப்பு நோய் குறித்த சுவரொட்டி போட்டி முதுகலை மாணவர்களுக்காக நடத்தப்பட்டு காட்சிபடுத்தப்பட்டது. ஜிப்மர் குழந்தைகள் மருத்துவத்துறை உதவி பேராசிரியர் சீனீவாசரங்கன் ஏற்பாடுகளை செய்திருந்தார்.

தினமலர்

# குழந்தைகளுக்கு வலிப்பு நோய் அதிகம் ஏற்படுகிறது

**புதுச்சேரி, டிச. 1–**

குழந்தைகளுக்கு தான் வலிப்பு நோய் அதிகம் ஏற்படுகிறது என, ஜிப்மர் உதவி பேராசிரியர் ரம்யா சீனிவாச ரங்கன் பேசினார்.

ஜிப்மர் குழந்தைகள் நல துறை சார்பில், குழந்தை பருவ வலிப்பு நோய் குறித்த ஒரு நாள் கருத்தரங்கம் நடந்தது. கருத்தரங்கில் ஜிப்மர் குழந்தைகள் மருத்துவ துறை உதவி பேராசிரியர் ரம்யா சீனிவாச ரங்கன் பேசியதாவது:

உலக அளவில் 1,000 குழந்தைகளில் 3 முதல் 6 பேர் வரை கை, கால் வலிப்பு நோய் ஏற்படுகிறது. இந்தியாவில் 1,000 குழந்தைகளில் 5.59 பேர் வரையிலும் இந்நோய் பாதிப்பு உள்ளது. வலிப்பு நோய்க்கு ஆரம்ப கால, துல்லியமான நோயறிதல், சிகிச்சை மிக முக்கியமானது. உலக அளவில் 40 சதவீதம் 18 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு வலிப்பு நோய் தாக்கம் ஏற்படுகிறது. 70 முதல் 80 சதவீதம் வரையிலான குழந்தைகள் ஒன்று அல்லது இரண்டு கூட்டு மருந்துகளால் வலிப்பு நோய்களில் இருந்து விடுபடுகின்றனர்' என்றார்.

தொடர்ந்து, வலிப்பு நோய் குறித்த மூட நம்பிக்கை, தவறான சிகிச்சை வழிமுறைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. முதுநிலை மாணவர்களுக்கு வலிப்பு நோய் குறித்த சுவரொட்டி போட்டி நடத்தப்பட்டது. அந்த படைப்புகள் காட்சிப்படுத்தப்பட்டன.